# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1370/2 - 2004 දෙසැම්බර් 06 වැනි සඳුදා - 2004.12.06

*1370/2 ஆம் இலக்கம் - 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமத்திய மாகாணத்தின் மாகாண சபை**

*2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வடமத்திய மாகாண நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம்*

**1 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டத்தின் 1 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும், சுற்றுலா, உட்கட்டமைப்பு, மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள், கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான அமைச்சருமாகிய பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா ஆகிய நான், வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம் 2005.01.01 ஆம் திகதி முதல் செயற்பட வேண்டுமென இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா,*
*வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,*
*சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும்,*
*சுற்றுலா, உட்கட்டமைப்பு, மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம்,*
*பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள்,*
*கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான அமைச்சர்.*

*அநுராதபுரம்,*
*2004, திசெம்பர் 01.*

*12-582/1*

---

**வடமத்திய மாகாணத்தின் மாகாண சபை**

*2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வடமத்திய மாகாண நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம்*

**6 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*வடமத்திய மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும், சுற்றுலா, உட்கட்டமைப்பு, மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள், கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான*

அமைச்சருமாகிய பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா ஆகிய நான், வடமத்திய மாகாணத்தின் உள்ளாகவோ அல்லது அல்லாமலோ நடாத்தப்படும் ஏதேனும் குதிரையோட்டத்தின் மீது மாகாணத்திலுள்ள ஏதேனும் இடத்தில் அல்லது வளவுகளில் காசுமீதோ கடனுக்கோ பிடிக்கப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு பந்தயத்தின் மீதும் (இதனகத்துப்பின்னர் பந்தயவரி எனக் குறிப்பீடு செய்யப்படும்) 5% (ஐந்து வீதத்திலான) வரியொன்று 2005.01.01 ஆம் திகதி முதல் செலுத்தப்பட வேண்டுமென இத்தால் கட்டளையிடுகின்றேன்.

பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா,
வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும்,
சுற்றுலா, உட்கட்டமைப்பு, மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம்,
பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள்,
கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான அமைச்சர்.

*அநுராதபுரம்,*
*2004, திசெம்பர் 01.*

*12-582/2*

---

**வடமத்திய மாகாணத்தின் மாகாண சபை**

*2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வடமத்திய மாகாண நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம்*

***10 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை***

வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும், சுற்றுலா, உட்கட்டமைப்பு, மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள், கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான அமைச்சருமாகிய பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா ஆகிய நான், வடமத்திய மாகாணத்திற்குள்ளாக ஔடதங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தொடர்பான வியாபார முயற்சியைக் கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆள் அத்தொழில் முயற்சி மேற்கொள்ளப்படுகின்ற வளாகத்தில் வருடாந்தப் பெறுமதியில் 50% (ஐம்பது வீத) த்திற்குச் சமமான விகிதத்திலான "ஔடதங்கள் மற்றும் இரசாயன வரி" 2005.01.01 ஆம் திகதி முதல் செலுத்தப்பட வேண்டுமென இத்தால் கட்டளையிடுகின்றேன்.

பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா,
வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும்,
சுற்றுலா, உட்கட்டமைப்பு, மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம்,
பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள்,
கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான அமைச்சர்.

*அநுராதபுரம்,*
*2004, திசெம்பர் 01*

*12-582/3*

---

**வடமத்திய மாகாணத்தின் மாகாண சபை**

*2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வடமத்திய மாகாண நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம்*

***11 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை***

வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும், சுற்றுலா, உட்கட்டமைப்பு, மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள், கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான

அமைச்சருமாகிய பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா ஆகிய நான், சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அல்லது அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் வடமத்திய மாகாணத்திற்குள்ளாக அமைந்துள்ள காணியிலிருந்து எவையேனும் கனிப்பொருட்களை அகழ்வதற்கு, தேடுவதற்கு, பதனிடுவதற்கு, சேகரிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு எவரேனும் ஆளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளவிடத்து மொத்த புரள்வில் 0.5% (தசம் ஐந்து) வீதத்திலான கனிப்பொருள் வரி 2005.01.01 ஆம் திகதி முதல் செலுத்தப்பட வேண்டுமென இத்தால் கட்டளையிடுகின்றேன்.

பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா,
வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும்,
சுற்றுலா, உட்கட்டமைப்பு, மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம்,
பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள்,
கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான அமைச்சர்.

அநுராதபுரம்,
2004, திசெம்பர் 01

12-582/4

---

## வடமத்திய மாகாணத்தின் மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி நியதிச்சட்டம்*

**7 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

வடமத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி நியதிச்சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும், சுற்றுலா, உட்கட்டமைப்பு வசதிகள், மாகாண சபை விவகாரம், பிரதேச நிருவாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல், எரிபொருட்கள், கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான அமைச்சருமாகிய பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா ஆகிய நான், கீழே விதந்துரைக்கப்படுகின்றவாறான புரள்வு வரி விகிதங்கள் 2004.12.31 ஆம் நாள் நள்ளிரவு/2005.01.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட வேண்டுமென கட்டளையிடுகின்றேன்.

| | | |
|---|---|---|
| (அ) | தங்கம், முத்து ,இரத்தினக்கல் விலைமதிப்புள்ள அல்லது பெறுமதிமிக்க தாதுப்பொருட்கள் மற்றும் உலோகங்களது விற்பனையின் புரள்வு தொடர்பில் | சதவிகிதம் 05 |
| (ஆ) | ஆபரணங்கள் மற்றும் அலங்காரங்களுக்கான ஆபரணங்களது விற்பனையின் புரள்வு தொடர்பில் | சதவிகிதம் 05 |
| (இ) | மூங்கில் தெங்குப்பலகை கூறாக்கப்பட்ட பலகை அல்லது மரத்துண்டங்கள் ஆகியன விற்பனையின் புரள்வு தொடர்பில் | சதவிகிதம் 05 |
| (ஈ) | அலுமாரி வைப்பகப்பெட்டி மற்றும் அலுவலகத் தளபாடங்கள் அடங்கலாக மரத்திலான அல்லது உலோகங்களினால் அல்லது பைபர் போன்றவற்றினால் தயாரிக்கப்பட்ட வீட்டுத் தளபாடங்களது விற்பனையின் புரள்வு தொடர்பில் | சதவிகிதம் 05 |
| (உ) | சாராயம் (பதனிடப்பட்ட சாராயம், கலக்கப்பட்ட சாராயம் அடங்கலாக) பியர், வைன், கள்ளு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபான வகைகளது விற்பனையின் புரள்வு தொடர்பில் | சதவிகிதம் 05 |
| (ஊ) | சிகரட் உற்பத்தியாளரிடமிருந்தோ அல்லது இறக்குமதியாளரிடமிருந்தோ கொள்வனவு செய்யப்பட்டு விற்பனையில் ஈடுபடும் சிகரட் மீதான புரள்வு தொடர்பில் | சதவிகிதம் 05 |
| (எ) | கீழே குறிப்பிடப்படும் இறக்குமதிப் பொருட்களான மட்பாண்டங்கள், செரமிக்டயில் குளியலறைச் சாதனங்கள், கண்ணாடி, கண்ணாடிப் பொருட்கனள் ஆகியவற்றின் விற்பனையின் புரள்வு தொடர்பில் | சதவிகிதம் 05 |

(ஏ) கீழே குறிப்பிடப்படும் இறக்குமதிப் பொருட்களான கமெரா, கையடக்கத் தொலைபேசி, அப்பியாச உபகரணங்கள், குளிர்சாதனப்பெட்டிகள், (குளிரூட்டிகள் , போத்தல் குளிரூட்டிகள், நீர் குளிரூட்டி, ஐஸ்கிறீம் உற்பத்திச் சாதனம் மற்றும் ஏனைய குளிரூட்டிகள் அடங்கலாக) குளிரூட்டற் சாதனங்கள், சலவை இயந்திரங்கள், வானொலிப்பெட்டி, ஒலி, ஒளி பதிவுச்சாதனங்கள், தொலைக்காட்சிப்பெட்டி மற்றும் ஏனைய மின் இயந்திரங்களும் உபகரணங்களும் அவற்றுக்கான பாகங்களும் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றிற்கான விற்பனையின் புரள்வு தொடர்பில் — சதவிகிதம் 05

(ஐ) வீதிகளில் பயன்படுத்தப்படுவதற்கென தீர்மானிக்கப்பட்டுள்ள அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள டிரெக்டர் அல்லது ட்ரேலர் அடங்கலாக இயந்திரவியல் நுட்பத்தின் மூலம் இயங்கும் (மோபெட் அங்கவீனர்களுக்கான வாகனங்கள் முழுமையாக அல்லது பிரதானமாக ஆட்களை கொண்டு செல்வதற்கென பயன்படுத்தப்படும் ரைசிகிள்கள் ஆகியனவும் இருபத்தாறு இருக்கைகளுக்கு மேற்பட்ட பேரூந்து வண்டி பிரேத வண்டி தவிர்ந்த) மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட/பதிவுசெய்யப்படாத மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள் ஆகியனவும் தரைமட்டப்படுத்தல், சேறு அகழ்தல், மண் அகற்றுதல், வனவளர்ப்பு மற்றும் அதுபோன்ற நடவடிக்கைகளுக்கான கமத்தொழில் அல்லது நிர்மாணப்பணிகளுக்கென தரையில் பயன்படுத்தப்படும் சில்லுகள் கொண்ட அல்லது சில்லுகளற்ற இயந்திரநுட்பத்தின் மூலம் இயங்கும் நில வாகனங்கள் அடங்கலாக மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றின் விற்பனையின் புரள்வு தொடர்பில் — சதவிகிதம் 05

(ஒ) மேலே (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), மற்றும் (ஐ) பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்படாத ஏனைய பண்டங்கள் அல்லது பொருட்களை கொள்வனவு செய்து விற்பனையிலீடுபடும் தொழில் முயற்சியின் விற்பனை மீதான புரள்வு தொடர்பில் — சதவிகிதம் 01

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1991.01.01 ஆந் திகதிய 643/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் 1993.03.15 ஆந் திகதிய 758/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளின் மூலம் வெளியிடப்பட்ட இப்பிரிவுகளின் கீழான கட்டளைகளும் அக்கட்டளைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட திருத்தங்களும், 2004.12.31 ஆம் திகதி நள்ளிரவு முதல் /2005.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும். இக்கட்டளையின் பின்னர் எழும் ஏதேனும் புரள்வு தொடர்பில் முன்னைய கட்டளைகள் செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.

பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கா,
வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வியும் போக்குவரத்தும்,
சுற்றுலா, உட்கட்டமைப்பு வசதிகள், மாகாண சபை விவகாரம்,
பிரதேச நிருவாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல், தகவல்,
எரிபொருட்கள், கலாசாரம் மற்றும் உணவும் காணியும் தொடர்பான அமைச்சர்.

மத்திய மாகாண சபை அலுவலகம்,
அநுராதபுரம்,
2004, திசெம்பர் 01.

12-582/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.